# உத்ராடம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ உத்ராடம் சக்தி**

பகரனந்தானந்தம், அமலம், உசிதம்,

சிற்பதம்சதானந்தசாறம்

**3. திருப்பாவைபாசுரம் – 3 உத்ராடம் இயல்பு**

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து

ஓங்குபெருஞ் செந்நெலூடுகயலுகள

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி

வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/x4GZZ2oLNmA**

**விளக்கம் :**

வாமனன் உத்தமன் ஆகும் வரலாறே உத்திராடமாகும். சுருங்கச் சொல்லி நிரம்ப பொருளை விவரிக்கும் ஆற்றலே உத்திராடமாகும். வாமனன் ஓங்கி உலகளந்த உத்தமனாக மாறும் சீர்மிகு சிறப்புகள் உத்திராட நக்ஷத்ரத்திற்கே உகந்தவை ஆகும்.

சதானந்த சாறம் இங்கே மீன்கள் வயல்களில் களிப்புடன் துள்ளுகின்றன. வண்டுகள் மலர்களில் உறங்குகின்றன. பசுக்கள் மனம் கோணாமல் பாலை பொழிகின்றன. இந்த உசிதங்கள் அமலம் நிறைந்தவை. இதுவே ஆண்டவனை அடைய சிற்பதம் ஆகும்.

மீன்கள் வயலிலே வாழ்கின்றன என்பது ஒரு நடைமுறை சாத்தியத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் விந்தைக்குரியது. அது போல் உத்ராடம் பல விந்தைகளை செய்ய வல்லவர். எனவே தான் உத்ராடத்தில் பிறந்த ஒரு மகன் இருந்தால் உலகையே விலை பேசலாம் என்பர். மேலும் உத்திராடத்தின் சிறப்பை ஆராதிக்க அனைத்து 26 நக்ஷத்ரங்களும் அணிவகுத்து நிற்கும். எனவே நீங்காத செல்வம் நிறைந்திடவே.

**“ யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே ”**

ஓங்கி உலகளந்த உத்தமன் ஓணத்தில் வருவான் பின்னே, இதை பகரவே நந்தா ஆனந்தத்தில் வாமனனே உத்திராடம். உத்திராடமும், திருவோணமும் ஒட்டிப் பிறந்தவை. வாமனன் மூன்றடி மண் கேட்டு உத்திராட வழியில் ஆனந்த வாக்குறுதியை பெற்றான். இதையே தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஆனந்தத்தை அளிக்கிறது.

ஓங்கு பெருஞ்செந்நெல் உசிதமாக உத்ராடத்தில் உதிக்கிறது. மது அருந்திய மகிழ்வுடன் குவளை மலர்களில் வண்டுகள் பலவாக சிற்பதத்தில் கண்ணுறங்குகிறது. வளமான பசுக்களோ உத்திராட வள்ளல்களைப் போல் மனங்கோணாமல் குடம், குடமாய் பாலைப் பொழிகின்றன. எனவே இவர்கள் சுற்றமும், நட்பும் சூழ சதானந்த சாரமாக விளங்குவர். பழம் எல்லைக்கோடு

என்றாலும் பழச்சாறு அடுத்த வாரிசாக ஆனந்த சாறாக அனைவருக்கும் உசிதமாக நீங்காத செல்வம் தந்து நிறையைச் செய்யும், ஆனந்த புருஷர்களே உத்திராடமாகும்.

எனவே வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். உத்ராடமே வருக! உத்ராடமே அருள்க!

## 4. வேதத்தில் உத்ராடம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

விஸ்வே தேவாய வித்மஹே
மகா ஷாடாய தீமஹி
கர்மஸுகர்ம தீமஹி
உத்ராஷாடா ப்ரசோதயாத்

ஆனந்த வார்த்தைகள் கூறாகும்
அதனால் செயல்கள் ஆறாகும்
பாநந்த பதங்கள் சாறாகும்
நீங்காத செல்வம் நிறைவாகும்

சிற்பதங்களிலே உலகளப்பாய்
இலவசம் தந்துமே அரவணைப்பாய்
உசிதங்கள் உனக்கான அரியணையாம்
உத்ரம் நோக்கி வணங்குகிறோம்

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

**5. உத்ராடம் கவிதை**

பழமாக இருத்தல் அனைவர்க்கும் மியல்பு
சாறமாக இருத்தல் உனக்கு மட்டுமே சாத்தியம்
ஆழமாக பேசுதல் ஆராய்ச்சிக் கியல்பு
ஆனந்தமாக பகருதல் உனக்கு மட்டுமே வாத்தியம்
ஆலவாய் சுந்தரனை அடையவது உலகியல்பு
அமலமே உசிதமென உரைக்கு நீயே சிற்பதம்
கோலமே கொண்டதென கூத்தாடுவதில் உலாகாடும்
காலமே காட்சியென சரணடையும் நட்சத்திரங்கள்

குறுக்கு சிறிதெனினும் கருத்து பெரிதல்லவோ?
பொறுத்து பொருந்தெனவே பருத்த சொலல் அல்லவோ?
அறுத்து மலங்களையே வறுத்த செயலல்லவோ?
மறுத்து மாயைகளையே வளைத்த மயனல்லவோ?

அதிதாயமே அனைத்து ராசிகளும் ஆராதிக்குமே
ஆதாயமே அனைவர்க்கும் ஆனந்த சாறேதித்திக்குமே
சமுதாயமே அணைத்து வரினும் இணையாதினிக்குமே
தன்தாயமே உயிர்பெனினும் தனக்கெலாம் பிணக்கே

விதை யழிந்தால் விருட்சமாகும் ஆடல் நீ
பழம் பிழிந்தால் சாறாகும் ஆனந்தம் நீ
காய் கனிந்தால் கல்லடியாகும் கானகம் நீ
இலை மடிந்தால் அறுசுவை முடியும் அலங்காரம் நீ

எல்லா புகழும் இறைவனுக்கே – தலைவனுக்கே
அல்லா புகழும் அலைகளுக்கே – கலைகளுக்கே
மல்லா வசனமும் சிற்பதத்திற்கே – பரானந்தமே
கல்லா இலக்கும் அமலம் காணவே – ஆனந்தமே

## 6. அபிராமி அந்தாதியில் உத்ராடம் சக்தி

### குழந்தைப்பேறு உண்டாக

தாமம் கடம்பு; படைபஞ்சபாணம்; தனுக்கரும்பு;

யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த

சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை

நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.

### தொழிலில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்

அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையைப்

பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்

சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

### விதியை வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயரின்றி

மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்

பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்

கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

### தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து

மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி; வண்டுகிண்டு

வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்

பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் உத்ராடம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் தேஜோவ்ருஷாய நம | – மழையருளும் சூரிய ஒளி வட்டம் கொண்டவனே போற்றி |
| ஓம் த்யுதிதராய நம | – அதிபுத்திசாலியே போற்றி |
| ஓம் ஸர்வஸஸ்த்ரப்ருதாம் – வராய நம | – ஆயுதாரணிக்கட்டு மேலானவனே போற்றி |
| ஓம் ப்ரக்ரஹாய நம | – பரிகாரங்களை ஏற்று பக்தர்குறை தீர்ப்பவனே போற்றி |
| ஓம் நிக்ரஹாய நம | – தீர்வுகளை நிபந்தனையிட்டு தீர்ப்பவனே போற்றி |
| ஓம் வ்யக்ராய நம | – முடிந்த முடிவுகளை உருவாக்கி ஆணைகளிடுபவனே போற்றி |
| ஓம் நைகஸ்ருங்காய நம | – விசித்திர கொம்பு முளைத்த கோமானே போற்றி |
| ஓம் கதாக்ரஜாய நம | – பழச்சாறு மந்திரமகிமையே போற்றி |
| ஓம் சதுர்மூர்த்தயே நம | – சனாதன தர்ம நால்வகை நிற உழைப்பே போற்றி (கருப்பு, வெள்ளை, மஞ்சள், சிவப்பு) |
| ஓம் சதுர்பாஹவே நம | – சாம, பேத, தான, தண்ட சதுர்புஜமே போற்றி |
| ஓம் சதுர்வ்யூஹாய நம | – சங்கு, சக்கர, புஷ்ப, கதை தத்துவமே போற்றி |
| ஓம் சதுர்கதயே நம | – படிப்பு, வணிக, நிர்வாக, உடல் உழைப்பே போற்றி |
| ஓம் சதுராத்மநே நம | – கர்ம, அர்த, காம மோட்சம் காட்டுபவனே போற்றி |
| ஓம் சதுர்ப்பாவாய நம | – சதுர்வேதத்தின் சத்திய பொருளே போற்றி |
| ஓம் சதுர்வேதவிதே நம | – அஜ ஏக பாத அபூர்வ சக்தியே போற்றி |
| ஓம் ஏகபதே நம | – சம்சார சக்கரத்தில் சாமார்த்திய மாலுமியே போற்றி |
| ஓம் ஸமாவர்த்தாய நம | – அனைத்திலிருந்து வேறுபட்ட ஏகபரம்பொருளே போற்றி |
| ஓம் அநிவ்ருத்தாத்மநே நம | – குறுக்கு வழியில் கூட உன்னை வெல்ல முடியாதே போற்றி |
| ஓம் துர்ஜாய நம | – ஆதவனின் ஆயிரம் வலிமைகூட எதிர்கொள்ளாதே போற்றி |
| ஓம் துரதிக்ரமாய நம | – பக்தியின் மூலம் அகப்படும் அன்பே போற்றி |
| ஓம் துர்லபாய நம | – பகீரத பிரயத்தனத்தால் உனை அடைய முடியாதே போற்றி |
| ஓம் துர்கமாய நம | – கடினபாதை எதுவாயினும் வீணே போற்றி |

| | |
|---|---|
| ஓம் துர்காய நம | – சமாதி நிலையில் சித்தர்கள் கூட வரமுடியாதே போற்றி |
| ஓம் துராவாஸாய நம | – அசுரர்கள் அறவே அழிக்கப்படுபவரே? போற்றி |
| ஓம் துராரிக்நே நம | – சுபமங்கள யோகம் சாதிக்கும் ஆன்மீகமே போற்றி |
| ஓம் ஸ்ப்பாங்காய நம | – சாரங்கத்தின் ரீங்கார தேனீக்கள் சாகசமே போற்றி |
| ஓம் லோகஸாரங்காய நம | – மூர்த்தி சிறுதென்று விஸ்வம் தாண்டி நிற்கும் பிரபஞ்சத்தின் விரிவாக்கமே போற்றி |
| ஓம் ஸ்தந்தவே நம | – ஓங்கி உலகளந்த உத்தமனே போற்றி |
| ஓம் தந்துவர்த்தநாய நம | – உலகளந்து ஆணவம் களைந்தவனே |
| ஓம் இந்த்ரகர்மணே நம | – இந்திரனின் இந்நாட்டு இந்திரியமே எந்நாட்டுக்கும் கடவுளே போற்றி |
| ஓம் மஹாகர்மணே நம | – விண்ணை மணந்த விந்தையே போற்றி |
| ஓம் க்ருதகர்மணே நம | – இல்லையென்று சொல்ல ஒரு பணியும் இல்லையே போற்றி |
| ஓம் க்ருதாகமாய நம | – புத்தகமும், அதன் புயல்பணியும் நீயே போற்றி |

## <u>8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உத்ராடம் சக்தி</u>

தராந்தோளித தீர்க்காக்ஷி தரஹாஸோஜ்வலன்முகீ
குருமூர்த்திர் குணநிதிர் கோமாதாகுஹஜன்ம பூ

தேவசீ தண்டநீதிஸ்தாதஹராகாச ரூபிணீ
ப்ரதிபன்முக்யராகாந்த திதி மண்டலபூஜிதா

கலாத்மிகாகவாநாதாகாவ்யாலாப விமோதினீ
ஸசாமரரமா வாணீ ஸவ்யதக்ஷிண ஸேவிதா

ஆதிசக்தி ரமேயாத்மாபரமாபாவனாக்ருதி
அநேககோடி ப்ரஹ்மாண்ட ஜநநீ திவ்ய விக்ரஹா

க்லீங்காரீகேவலாகுஹ்யாகைவல்ய பத தாயினீ
த்ரிபுரா த்ரிஜகத்வந்த்யாத்ரிமூர்த்திஸ்த்ரிதசேச்வரீ

த்ரியக்ஷரீ திவ்யகந்தாட்யா ஸிந்தூர திலகாஞ்சிதா
உமாசைலேந்த்ரதநயாகௌரீ கந்தர்வ ஸேவிதா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் உத்ராடம் சக்தி

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல

ஸ்கந்தகுருவே சத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு

சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே நீ

சத்தியமாய் ஞானமாய் ஸதானந்தமாகி விடு

அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்

திருமுறைகள் திருமறைகள் செப்புவதும் இதுவேதான்

ஸ்கந்தகுரு கவசமதைச் சொந்தமாக்கிக் கொண்டு நீ

பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்

பிறவிப் பிணியகலும் ப்ரம்மானந்த முண்டு

இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்

மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்

அனுதினமும் கவசத்தை அன்புடன் ஜபித்திடப்பா

சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா

கவலை யகன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே

பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே

கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்

கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்

கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே

சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமே நீ

ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு

அஷ்ட ஐஸ்வர்யந்தரும் அந்தமில்லா இன்பந் தரும்

ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரொடிடுவன்

வாழையடி வாழையைப் போல் வம்சமதைப் பெற்றிடுவன்

பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்ந்திடுவன்

சாந்தியும் ஸௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி உத்ராடம் சக்தி

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்

பரிவாரம் எனும் பதம் மேவலையே

புரிவாய் மனனே பொறையாம் அறிவால்

அரிவாய் அடியோடும் அகந்தையையே.(37)

ஆதாளியை. ஒன்று அறியேனை அறந்

தீது ஆளியை ஆண்டது செப்புமதோ

கூதாள கிராத குலிக்கு இறைவா

வேதாள கணம் புகழ் வேலவனே.(38)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் உத்ராடம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| விஸ்வம்பாரி | சியாமளாங்கி | சண்முகபிரியா | சண்முகபிரியா |

## 12. மூலமந்திரம்

ஓம் சாயி நமோ நமோ

ஸ்ரீ சாயி நமோ நமோ

ஜெய் ஜெய் சாயி நமோ நமோ

சற்குரு சாயி நமோ நமோ

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பலா | கடுக்கா | சாரபருப்பு | தாளை பனை |

## 14. பரிகாரம்

- கணபதி கோயிலில் இனிப்புகளைப் படைத்து பிரசாதம் அளிக்கவும்.

- நவகிரக கோயிலில் யாகம் செய்யவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்,** பூங்குடி - சிவகங்கை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra